**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.141/2025
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : விஸ்வநாதன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கோவிந்தன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

22.06.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தேரிருவேலி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2025ம் தேதி நான் தேரிருவேலி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது சுமார் 18.45 மணிக்கு நானும், காவலர் திரு.இளையராஜா, சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் ஆகியோர் புகையிலை மற்றும் மதுபாட்டில்கள் சம்மந்தமாக தேரிருவேலி எல்லைக்குள் சென்றபோது அங்கு உள்ள டாஸ்மாக் அருகில் உள்ள ஒரு கடையில் 180ML அளவுள்ள கிழிந்து லேபிளுடன் உள்ள மதுபாட்டில் இருந்தது. அதன் அருகில் 90 ML அளவுள்ள மதுவை பிளாஸ்டிக் டம்பளரில் இனம் தெரியாத ஒரு நபருக்கு இரண்டு நபர்கள் மதுவை ஊற்றிக்கொடுத்துக்கொண்டிருந்தார்கள். மேலும் மது விற்ற பணம் ரூ.500/– பணம் அவர்களிடம் இருந்தது. அவர்களை விசாரணை செய்ததில் அவர்கள் பெயர் திருமூர்த்தி மற்றும் பாஸ்கரன் என்று கூறினார்கள். அவர்கள் தான் இந்நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிகளாக உள்ளனர்.

2) எதிரிகளை கைது செய்து உறவினர்களுக்கு தகவல் சொல்லி 18.50 மணிக்கு மதுபாட்டில், பிளாஸ்டிக் டம்ளர், விற்ற பணம் ரூ.500/– ஆகியவற்றை சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்கள் கைப்பற்றி அங்கு அத்தாட்சி தயார் செய்து அங்கு யாரும் இல்லாததால் அந்த அத்தாட்சியில் நானும், காவலர் திரு.இளையராஜா ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அத்தாட்சியில் முதலாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும், புகைப்படங்களில் உள்ள சொத்துக்களை தான் கைப்பற்றினார். பின் ஆஜர் எதிரிகளுடன் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் தேரிருவேலி காவல்நிலையத்திற்கு சென்று இரவு சுமார் 19.20 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்கள் குற்ற எண்.13/2025 சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(B) TNP Act ன் கீழ் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தார். நான் சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். புலன்விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எத்தனை மணிக்கு காவல்நிலையத்திலிருந்து கிளம்பினோம் என்றால் 17.30 மணி இருக்கும். அன்றைய தினம் முதலில் எந்த கிராமத்திற்கு சென்றோம் என்றால் இளங்காக்கூர், பெரியகையகம், அனிக்குருந்தான் ஆகிய கிராமங்களுக்கு சென்றோம். மேற்படி கிராமங்களை தவிர வேறு கிராமங்களுக்கு சென்றோமா என்றால் இல்லை. இளங்காக்கூர் கிராமத்திற்கு செல்லும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் சுமார் 15.30 மணி இருக்கும். இளங்காக்கூருக்கும் பெரியகையகம் கிராமத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் ஒரு கி.மீ. தொலைவு இருக்கும்.

2) தேரிருவேலி காவல்நிலையத்திற்கும் பெரியகையகம்கிராமத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 4 கி.மீ. தொலைவு இருக்கும்.

அனிக்குருந்தான் கிராமத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்தார் என்றால் சுமார் 10 நிமிடம் இருந்தோம். அனிக்குருந்தான் கிராமத்திலிருந்து தேரிருவேலி காவல்நிலையத்திற்கு எத்தனை மணி இருக்கும் என்றால் அனிக்குருந்தான் கிராமத்திலிருந்து இளங்காக்கூர் தான் வந்தோம். இளங்காக்கூர் கிராமத்திலிருந்து தேரிருவேலி காவல்நிலையத்திற்கு புறப்படும்போது நேரம் என்னவென்றால் சுமார் 18.30 மணி இருக்கும். நான் கையொப்பமிட்டதாக சொல்லப்படும் அத்தாட்சியில் உள்ள 500 ரூபாய் நோட்டுகளின் வரிசை எண் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உள்ள பிளாஸ்டிக் டிம்ளர் மதுவுடன் இருந்ததா அல்லது மது இல்லாமல் இருந்ததா என்றால் மதுவுடன் தான் இருந்தது.

3) நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் மதுவுடன் கூடிய பிளாஸ்டிக் டம்ளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை வெறும் பிளாஸ்டிக் டம்ளர் என்று தான் குறிப்பிடப்பட்டிருந்தது. என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் புகைப்படங்களில் பிளாஸ்டிக் டம்ளரில் மதுவோ தண்ணீருடன் கலக்கப்பட்ட மதுவோ இல்லை என்றால் சரிதான். சான்று பொருட்களை யார்புகைப்படம் எடுத்தது என்றால் நான் தான் புகைப்படம் எடுத்து பிரிண்ட் செய்தேன். எங்கு வைத்து பிரிண்ட் செய்யப்பட்டது என்றால் முதுகுளத்தூரில் உள்ள மணி பிளக்ஸ் கடையில் வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது.

4) வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் தேரிருவேலி அரசு மதுபானக்கடைக்கும் சுமார் 5 அடி தொலைவு இருக்குமா என்றால் இருக்கும். நான் கையொப்பம் இட்டதாக சொல்லப்படும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில் பாதி அளவு மது இருந்ததா அல்லது முழு அளவு இருந்ததா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல 180ML அளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சம்பவம் நடந்த இடம் யாருக்கு சொந்தமானது என்று எனது விசாரணையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால்

சொல்லவில்லை. தேரிருவேலி அரசு மதுபானக்கடையின் எண் என்னவென்று எனக்கு தெரியாது என்றாலும் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான்.

5) இந்த வழக்கில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தபின்பு அத்தாட்சி தயார் செய்யப்பட்டதா அல்லது அத்தாட்சி தயார் செய்யப்பட்டபின்பு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் அத்தாட்சி தாயார் செய்த பின்பு தான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் மற்றும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவத்தின்போது சட்ட ஒழுங்கு பிரிவில் தான் பணியாற்றி வந்தோம் என்றாலும், மதுவிலக்கு காவல்நிலையத்தில் நாங்கள் பணிபுரியவில்லை என்றால் சரிதான். என்னை வழக்கு சம்மந்தமாக எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து 19.20 மணிக்கு விசாரித்தார்கள். மணி ஸ்டுடியோவிற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 12 கி.மீ. இருக்கும்.

6) காவல்நிலையத்திலிருந்து போட்டோவை பிரிண்ட் எடுப்பதற்கு எத்தனை மணிக்கு கிளம்புனோம் என்றால் 19.30 மணிக்கு புறப்பட்டோம். புகைப்படத்தை எத்தனை மணிக்கு விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன் என்றால் 20.15 மணிக்கு ஒப்படைத்தேன். எதிரிகள் மதுபாட்டில்களை யாருக்கு விற்பனை செய்தார்கள் என்ற விபரம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நேரத்தில் பொது மக்கள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. மதுபானக்கடையில் யார் யார் பணிபுரிந்தார்கள் அல்லது எத்தனை நபர்கள் பணிபுரிந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்துறை அதிகாரிகளால் புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றாலும்

சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வழக்கு ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.